**நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 14, 2016**

1. உலகின் மிக நீளமான புல்லட் ரயில் நெட்வொர்க் எந்த நாட்டில் நிறுவப்பட்டுள்ளது ?

A. சீனா

B. ஜப்பான்

C. அமெரிக்கா

D. ஜெர்மனி

**விடை : A. சீனா**

உலகின் மிக நீளமான புல்லட் ரயில் (அல்லது அதிவேக ரயில் (HSR)) வலையமைப்பை சீனா உருவாக்கியுள்ளது.இதற்காக 20,000 கி.மீ. வரையிலான பாதையை அமைத்துள்ளது. பயணிகள்-அர்ப்பணித்த இணைப்புகள் (PDLs - passenger-dedicated lines) நெட்வொர்க்கின் ஒரு பகுதியாக இந்த நெட்வொர்க் சேவை திகழ்கிறது. சீனாவில் 200 கி.மீ அல்லது அதற்கு மேலான வேகத்தில் செல்லும் எந்த ஒரு வணிக ரயிலும் HSR ரயில் என கருதப்படுகிறது.

2. 2016 உலக தற்கொலை தடுப்பு தினத்தின் (WSPD) மையக்கருத்து என்ன?

A. Suicide Can Be Prevented!

B. Connect, Communicate, Care

C. Stigma: A Major Barrier to Suicide Prevention

D. Light a candle near a Window

**விடை : B. Connect, Communicate, Care**

உலகம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தற்கொலைகளை தடுக்கவும், உலகம் முழுவதும் அர்ப்பணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10-ம் தேதி உலக தற்கொலை தடுப்பு தினம் (WSPD) கடைப்பிடிக்கப்படுகிறது. 2016-ம் ஆண்டின் மையக்கருத்து, "Connect, Communicate, Care"

3. புத்தகம் “Anything but Khamoshi”, எந்த பிரபல ஆளுமையின் சுயசரிதை ?

A. ரஜினிகாந்த்

B. பாரதி பிரதான்

C. சத்ருகன் சின்ஹா

D. அத்வானி

**விடை : C. சத்ருகன் சின்ஹா**

“Anything but Khamoshi: The Shatrughan Sinha Biography” புத்தகம் பாரதி எஸ் பிரதான் எழுதப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மிகவும் பிரபலமான பிஹாரி பாபுவின் வேதனைகள் குறித்த நேர்மையான வாசிப்பாக இருக்கிறது.

4. 2016 தமிழ் ரத்னா விருது பின்வரும் யாருக்கு அமெரிக்காவில் வழங்கப்பட்டுள்ளது ?

A. லலித் மோடி

B. சுப்பிரமணியன் சுவாமி

C. நரேந்திர மோடி

D. லதா மங்கேஷ்கர்

**விடை : B. சுப்பிரமணியன் சுவாமி**

சுப்பிரமணியன் சுவாமி, பா.ஜ., மூத்த தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான இவருக்கு, ஊழலுக்கு எதிராக போராடிய மற்றும் அரசாங்கத்தின் செயல்பாட்டில் இன்னும் கூடுதலான வெளிப்படைத்தன்மையை கொண்டு வர முயன்ற காரணத்திற்காக நியூயார்க்கில் உள்ள அமெரிக்க தமிழ் சங்கம் (ATS) தமிழ் ரத்னா விருது வழங்கியுள்ளது. இதற்கு முன், தமிழ் ரத்னா விருது பெற்றவர்கள்: ஆஸ்கார் வென்ற ஏ.ஆர் ஏ. ஆர். ரகுமான் மற்றும் திரைப்பட இயக்குனர் பாரதிராஜா.

5. எந்த நாடு, 2016 ட்ராக் ஆசிய கோப்பை சைக்கிள் போட்டியை நடத்தவுள்ளது ?

A. சீனா

B. இந்தியா

C. பூட்டான்

D. இலங்கை

**விடை : B. இந்தியா**

இந்தியா, புது தில்லியின் இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில் 2016 ட்ராக் ஆசிய கோப்பை சைக்கிள் போட்டியை

நடத்தவுள்ளது. இந்நிகழ்வு, சர்வதேச சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு , இதில் பெறும் புள்ளிகள் விளையாட்டு வீரர் தரவரிசையில் கணக்கில் கொள்ளப்பட்டு, உலக சாம்பியன்ஷிப் தகுதி சுற்றின் ஒரு பகுதியாக கருதப்பட உள்ளது. பாகிஸ்தான் உள்பட 11 நாடுகளில் இருந்து 150 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டியை நடத்த 29 பேர் கொண்ட ஒரு வலுவான குழுவை இந்தியா உருவாக்கியுள்ளது

6. “His Bloody Project” என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது ?

A. பால் பீட்டி

B. கிரேம் மேக்ரே பர்னெட்

C. ரோஜர் புருன்யாட்

D. ஜேம்ஸ் ராபர்ட்சன்

**விடை : B. கிரேம் மேக்ரே பர்னெட்**

“His Bloody Project” என்ற புத்தகம் கிரேம் மேக்ரே பர்னெட் என்பவரால் எழுதப்பட்டது. இது ஸ்காட்டிஷ் ஹைலேண்ட்ஸ்-ல் உள்ள Culduie பகுதியில் வாழும் சிறுநில சமூகத்தின் வறுமை கதையை கூறுகிறது. இப்புத்தகம் 2016 மேன் புக்கர் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

7. எந்த மாநில சுற்றுலா துறை 2016 விண்டேஜ் பைக் மற்றும் கார் விழாவை நடத்த உள்ளது ?

A. கேரளா

B. கோவா

C. தமிழ்நாடு

D. அசாம்

**விடை : B. கோவா**

கோவா சுற்றுலா துறை, அதனுடைய முதல் பழங்கால பைக் மற்றும் கார் விழாவை அக்டோபர் 1, 2016-ல் நடத்தவுள்ளது. இதில் 1921-இல் இருந்து 1970 வரை உள்ள இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.விண்டேஜ் கார்களான Chevrolet, Mercedes, Volkswagen மற்றும் பைக்குகளான Norton, BSA and BMW போன்றவை விழாவின் ஈர்ப்பு மையமாக இருக்கும்.

8. பின்வரும் எந்த இந்திய வம்சாவளி விஞ்ஞானி 2016-ம் ஆண்டிற்கான Lemelson-MIT பரிசை வென்றுள்ளார்?

A. மன்தீப் கவுர்

B. கீர்த்தி சிங்

C. ரமேஷ் ரஸ்கர்

D. வர்ஷா பாட்டீல்

**விடை : C. ரமேஷ் ரஸ்கர்**

ரமேஷ் ரஸ்கர், ஒரு இந்திய வம்சாவளி விஞ்ஞானி. $ 5 லட்சம் மதிப்புள்ள 2016-ஆம் ஆண்டின் Lemelson-MIT விருதை பெற்றார். உலகளவில் வாழ்க்கையை மேம்படுத்தும் தீர்வுகளை உருவாக்குவதற்கான கண்டுபிடிப்புகளுக்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் MIT ஊடக ஆய்வகத்திலுள்ள கேமரா கலாச்சார ஆராய்ச்சி குழுவின் நிறுவனர் மற்றும் மீடியா ஆர்ட்ஸ் மற்றும் அறிவியல் துறையில் ஒரு இணை பேராசிரியர். இவர் பெயரில் 75-க்கும் மேற்பட்ட காப்புரிமைகள் உள்ளன மற்றும் 120-க்கும் மேற்பட்ட ஆய்வு வெளியீட்டு கடிதங்களையும் எழுதியிருக்கிறார். பெம்டோ-புகைப்படம் உட்பட தீவிர வேகமான உருவகப்படுத்தும் அமைப்பு கண்டுபிடிப்பின் இணை கண்டுபிடிப்பாளர். இவர் வளரும் நாடுகளில் குறைந்த செலவில் கண் பராமரிப்பிற்கான தீர்வுகளை கண்டுபிடித்தார் மற்றும் புத்தகத்தினை திறக்காமல் அதிலுள்ளவற்றை படிக்கும் கேமராவையும் கண்டுபிடித்துள்ளார்.

9. இந்தியாவில் எந்த தேதியில் "தேசிய இந்தி திவாஸ்" தினம் கொண்டாடப்படுகிறது?

A. செப்டம்பர் 15

B. செப்டம்பர் 14

C. செப்டம்பர் 16
D. செப்டம்பர் 13

**விடை : B. செப்டம்பர் 14**

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர்-14 ம் தேதி தேசிய இந்தி திவாஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில், இந்திய ஜனாதிபதியால், ராஷ்டிரபதி பவனில், இந்தி மொழிக்கு சிறந்த பங்களிப்பாற்றிய அமைச்சர்கள், துறைகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு Rajbhasha விருதுகள் வழங்கப்படும். இந்திய சட்டசபையால்,1949-ஆம் ஆண்டு இதே நாளில் இந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது.

10. 2016 ரியோ பாராலிம்பிக்ஸ்சில் தங்கம் வென்றுள்ள தேவேந்திர ஜஜாரியா எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?
A. குண்டெறிதல்
B. ஈட்டி எறிதல்
C. வில்வித்தை
D. ஸ்பிரிண்ட்

**விடை : B. ஈட்டி எறிதல்**

தேவேந்திர ஜஜாரியா, 2016 ரியோ பாராலிம்பிக்ஸ்சில் ஆண்கள் ஈட்டி எறிதல் F46 போட்டியில் தங்கம் வென்றார். இது ஜஜாரியாவுக்கு இரண்டாவது தங்கம் ஆகும் . முன்னதாக, 2004 ஏதென்ஸ் பாராலிம்பிக்ஸ்சில் 62.15 மீட்டர் தூரம் வீசி உலக சாதனை படைத்து தங்கம் வென்றார். இந்த நிலையில்,பாராலிம்பிக்ஸ்சில் இரண்டு தங்க பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.